TNPSC JOB

V9T

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2025

-----

வகுப்பு 9

காலம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

பகுதி I

அ)சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 1 5×1=15

1. கல்வியில்லாப் பெண்கள் எவ்வகை நிலத்திற்கு ஒப்பானவர்கள் ?

அ)நஞ்சை நிலம் ஆ)களர் நிலம் இ)உவர் நிலம் ஈ)புஞ்சை நிலம்

2. 'சிந்தாமணி' என்பதன் இலக்கணக்குறிப்பு

அ)வேற்றுமைத்தொகை ஆ)ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ)பண்புத்தொகை ஈ)வினைத்தொகை

3. பகுதி விகுதி மட்டும் இடம் பெறும் சொல் எது?

அ)வென்றார் ஆ)நடந்த இ)வளர்க ஈ)பொருந்திய

4. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?

அ)அகழி ஆ)ஆறு இ)இலஞ்சி ஈ)புலரி

5. பெயரடை இடம்பெறாத தொடரைக் கண்டறிக

அ)நல்ல நண்பன் ஆ)இனிய வணக்கம்

இ)எந்த ஓவியம்? ஈ) கொடிய விலங்கு

6. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிட மொழி எது?

அ. தமிழ் ஆ. தெலுங்கு

இ. மலையாளம் ஈ. கன்னடம்

7. "ஒன்றறிவதுவே உற்றறிவதுவே

இரண்டறிவதுவே அதனொடு நாவே" இவ்வடிகளில் 'அதனொடு' என்பது எதைக் குறிக்கிறது?

அ) நுகர்தல் ஆ)தொடு உணர்வு இ)கேட்டல் ஈ)காணல்

8. திருநாதர் குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை

அ)விலங்கு உருவங்கள் ஆ)தீர்த்தங்கரர் உருவங்கள்

இ)தெய்வ உருவங்கள் ஈ)நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

9. ஐந்து சால்புகளில் இரண்டு

அ)வானமும் நாணமும் ஆ)நாணமும் இணக்கமும்

இ)இணக்கமும் சுணக்கமும் ஈ)இணக்கமும் பிணக்கமும்

10. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

அ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.

ஆ) தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி.

1. அ மட்டும் சரி 2. அ, ஆ இரண்டும் சரி

3. அ, ஆ இரண்டும் தவறு 4. ஆ மட்டும் சரி

11. "வசிபட முதுநீர் புக்கு

மலையெனத் துவரை நன்னீர்"– பாடல் அடிகளில் முதுநீர் என்பது எது?

அ)மழை நீர் ஆ)கடல் நீர் இ)ஆற்று நீர் ஈ)நிலத்தடி நீர்

<u>ஆ) பாடலைப் படித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக:</u>

தோரண வீதியும் தோம்அறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்;
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்;

Scanned with OKEN Scanner

TNPSC JOB | www.tnpscjob.com

12. இப்பாடலின் ஆசிரியர் யார்?

அ) பாரதிதாசன் ஆ)புலவர் குழந்தை இ)தொல்காப்பியர் ஈ)சீத்தலைச் சாத்தனார்

13. 'தோம்'என்ற சொல்லின் பொருள்

அ) மன்றம் ஆ) மாலை இ) குற்றம் ஈ) மலை

14. இப்பாடல் இடம்பெற்ற நூல்

அ)சீவக சிந்தாமணி ஆ)பெரியபுராணம் இ)முத்தொள்ளாயிரம் ஈ)மணிமேகலை

15. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகை எது?

அ)தோரண, தோம்அறு ஆ)தோரண, பூரண

இ)காய்க்குலை,பூக்கொடி ஈ)பலவுடன், பரப்புமின்

## பகுதி II

**அ)எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி 4×2= 8**

**(குறிப்பு 21–ஆம் வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்)**

16. விடைக்கேற்ற வினா அமைக்க:

அ) சோழர்காலம் செப்புத் திருமேனிகளின் பொற்காலம்.

ஆ) பருகுநீர் உள்ள நீர் நிலைக்கு ஊருணி என்று பெயரிட்டனர்.

17. "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" குறிப்புத் தருக.

18. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

19. ஏறு தழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.

20. உலகத்துக்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?

21. '...தரும்".என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

**ஆ) எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் குறுகிய விடையளி 5×2=10**

22. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி எழுதுக

அ)உலகில் மூவாயிரம் மொழிகள் _______ ( பேசு )

ஆ)தவறுகளைத் ___________ ( திருத்து )

23. அகராதியில் காண்க

அ)சிட்டம் ஆ)பௌரி

24.கலைச்சொல் தருக

அ) Excavation ஆ) Statue

25. பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்கு

அ)கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது

ஆ)நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்கும் பாய்வது போல

26. பூக்கும் – பகுபத உறுப்பிலக்கணம் தருக .

27. பிழை நீக்கி எழுதுக:

துன்பத்தால் பொறுத்துக் கொள்பவனே வெற்றி பெறுவான்

28. விடையைத் தமிழ் எண்களில் எழுதுக:

அ) தொல்காப்பியர் குறிப்பிடும் உயிர்வகை ______

ஆ) திருவெம்பாவையில் உள்ள பாடல்கள் எண்ணிக்கை _____

## பகுதி III

**அ) சிறு வினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி) 2×3=6**

29. சோழர் காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

30. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

31. **பின்வரும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**


Scanned with OKEN Scanner

TNPSC JOB



தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாக காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டு இணங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர் பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப் படுகின்றன. கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகள் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன

**விடையளி**

அ)மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறு தழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?

ஆ)தமிழக மாட்டு இணங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?

இ)பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கிற காளை இனம் எது?

**ஆ) எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2×3=6

**( 34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளி)**

32."புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் "உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

33. தோழியை எழுப்பும் நிகழ்வைத் 'திருவெம்பாவை' எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?

34. **அடி பிறழாமல் எழுதுக**

அ."நீரின்றி அமையாது யாக்கைக்கு ..."எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல்

**அல்லது**

ஆ. "கல்லிடைப் பிறந்த ஆறும்..." எனத் தொடங்கும் இராவண காவியப் பாடல்

**இ) சிறு வினா (எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி).** 2×3=6

35.அளவையாகு பெயர்களின் வகைகளை விளக்குக.

36.'உயிரளபெடை'என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

37.ஏகதேச உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

**பகுதி IV**

**அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** 5×5=25

38. அ.குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண் கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

**(அல்லது)**

ஆ.இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

39. அ.உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

**(அல்லது)**

ஆ.பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி விண்ணப்பம் எழுது.

40. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



Scanned with OKEN Scanner

TNPSC JOB



41. குமரன் என்பவர் சிவகாசியில் உள்ள அஞ்சலகத்தில் தன் கணக்கில் இருந்து ₹1000 பணம் பெற விரும்புகிறார். தேர்வர் தன்னைக் குமரனாக எண்ணி படிவத்தை நிரப்பவும்.

42. அ.மொழி பெயர்க்க:-

A Nations culture resides in the hearts and in the soul of its people - Mahatma Gandhi

The art of people is a true mirror to the their minds - Jawahar Lal Nehru

The biggest problem is the lack of love and charity -Mother Teresa

You have to dream before your dreams can come true -APJ Abdul Kalam

Winners don't do different things; they do things differently- Shiv Khera

**(அல்லது)**

ஆ. பள்ளியில் என் பொறுப்புகள் என்பது குறித்து ஐந்து வரிகள் எழுது.

## பகுதி V

**விரிவான விடையளி** 3×8=24

43. அ. வேளாண்மை நீரை அடிப்படையாகக் கொண்டது என்பதை விளக்குக.

**(அல்லது)**

ஆ. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

44. அ. சுற்றுச்சூழலைப் பேணிக் காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்ததாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்து கொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

**(அல்லது)**

ஆ. பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழா நிகழ்ச்சிச் செய்திகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்கு

45. அ.புலம்பெயர்ந்த மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் எங்ஙனம் பாதிப்பு தெரிகின்றது என்பதை ஆறாம் திணை வாயிலாக விவரிக்க.

**(அல்லது)**

ஆ. இசைக்கு நாடு மொழி இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக

- - - - - -

Scanned with OKEN Scanner

TNPSC JOB | www.tnpscjob.com